1st August 1966]

திரு. வை. சங்கரன் : இன்றைய நிலையிலே நகரத்திலுள்ள மில் தொழிலாளர்களுடைய மாதச் சம்பளம் 125 ரூபாய்க்கு மேலாகவே இருக்கிறது. ஆகவே, இந்த வரம்பை உடனடியாக உயர்த்துவதற்கு வழிவகை செய்யப்படுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : எவ்வளவு விரைவாகப் பரிசீலனை செய்யப்பட்டு முடிவு எடுக்க வேண்டுமோ அவ்வளவு விரைவாக முடிவு எடுக்கப்படும்.

திரு. எம். வி. கரிவேங்கடம் : ஏற்கனவே, இந்த உதவிப் பணம் கோரி பல மாணவர்கள் விண்ணப்பித்து விட்டார்கள். இப்போது வருமான வரம்பு 1,500 ரூபாய் ஆக இருப்பதை 2,000 ரூபாய் ஆக அரசாங்கம் உயர்த்த இருக்கிறது. அப்படி அதை உயர்த்தும் போது அந்த அளவு வருமானம் வரக்கூடிய பெற்றோர்களின் பிள்ளைகள் புதிதாக விண்ணப்பங்கள் போடுவதற்கு அனுமதி அளிக்கப்படுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : ஏற்கனவே, 1,500 ரூபாய் வரை வருமானம் உள்ளவர்கள் விண்ணப்பங்கள் போட்டிருப்பார்கள். அதை நாம் உயர்த்தப் போகிறோமே தவிர, குறைக்கப் போவதில்லை.

*11 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் : } கனம் உள்துறை
திரு. சங்கரன் :
அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) குறைந்த வருமானமுள்ளவர்களின் பிள்ளைகள் படிப்பிற்கான ஸ்காலர்ஷிப் பெற வருமான வரம்பென்ன ?

(இ) அந்த வரம்பை உயர்த்தும் உத்தேசம் உண்டா ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) மருத்துவம், பொறியியல், விலங்கின மருத்துவம், வேளாண்மை முதலிய படிப்புத்துறைகள் சம்பந்தமாக வருமானம் வரம்பு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 2,400. ஏனைய படிப்புத் துறைகள் சம்பந்தமாக வருமான வரம்பு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 2,000.

(இ) இல்லை.

திரு. கோ. சி. மணி : இந்த வருமான வரம்பு எந்த ஆண்டிலிருந்து நிர்ணயிக்கப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : Till 1964, the Government of India scholarships to other backward students were granted on caste-*cum*-income basis. From 1964–65 it is being granted purely on income basis without any reference to caste, as desired by the Government of India.

திரு. கே. ஏ. மதியழகன் : இந்த உச்ச வரம்பைச் சர்க்கார் ஊழியர்களுடைய குழந்தைகள் விவகாரத்தில் மருத்துவக் கல்லூரி, என்சினியரிங் கல்லூரி போன்றவற்றில் சேருபவர்களுக்கு இன்னும் கொஞ்சம் தளர்த்தி உச்ச வரம்பை அதிகமாகச் செய்யும் உத்தேசம் உண்டா ?

TRUTH ALONE TRIUMPHS

THE HON. SRI P. KAKKAN: This Government have suggested to the Government of India that funds shoud be provided to sanction scholarships to all eligible students whose parents' income is Rs. 1,500, during the Fourth Plan period.

திரு. எம். எஸ். செல்வராஜன் : வருமான வரம்பு 2,000, 2,500 ரூபாய் என்று இருந்தாலும் சென்ற ஆண்டு லோ இன்கம் குரூப்பின் கீழ் இந்த ராஜ்யத்தைப் பொறுத்தமட்டில் வருஷத்திற்கு 360 ரூபாய் வருமானம் உள்ளவர்களுக்கு மட்டுந்தான் இந்த ஸ்காலர்ஷிப் வழங்கப்பட்டிருக்கிறது. இந்த நிலையில் அரசாங்கம் எத்தனை சத விகிதம் பேருக்கு இந்த ஸ்காலர்ஷிப் கொடுத்திருக்கிறது என்பதைத் தெரிவிப்பார்களா ? இதைக் கூடுதலாகப் பெருக்கிக் கொடுக்க என்ன வழிவகைகள் செய்திருக்கிறார்கள் ?

கனம் திரு. பூ. கக்கன் : வருஷந்தோறும் ரூ. 14,00,840 மத்திய அரசாங்கத்திலிருந்து ஸ்காலர்ஷிப்புக்காகக் கொடுக்கிறார்கள். கடந்த வருஷம் 360 ரூபாய் வருமானம் உள்ளவர்களுக்குத்தான் இந்த ஸ்காலர்ஷிப் கொடுக்கப்பட்டிருக்கிறது. 1,140 பேருக்கு ஸ்காலர்ஷிப் கொடுக்கப்பட்டிருக்கிறது. நான் திரு. மதியழகன் கேள்விக்குப் பதில் சொல்லும்போதே சொன்னேன்.

This Government have suggested to the Government of India that funds should be provided to sanction scholarships to all the eligible students.

ஆண்டு ஒன்றுக்கு 1,500 ரூபாய் வரை வருமானம் உள்ள எல்லோருக்குமே ஸ்காலர்ஷிப் கொடுக்கலாம் என்று அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது.

விதவைகளுக்குத் தொழிற்பயிற்சி

*12 கேள்வி.—**திரு. து. ப. அழகமுத்து :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) விதவைகளுக்கு தொழிற்பயிற்சி அளிப்பதற்கு திட்டம் ஏதேனும் வகுக்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரம் என்ன ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) விதவைகளுக்கு மாத்திரம் என்று தொழிற் பயிற்சி அளிக்க தனிப்பட்ட திட்டம் எதுவும் கிடையாது.

(இ) விதவைகள், கணவனால் கைவிடப்பட்டவர்கள், மற்றும் பொதுவாக ஆதரவற்றவர்கள் போன்றவர்களுள், வயது வந்த பெண்களுக்கு தாம்பரம் பணிப்பயிற்சி மனையில் தையல் தொழிற் பயிற்சியும், பாய் முடைதலும் கற்றுக் கொடுக்கப்படுகின்றன.

திரு. து. ப. அழகமுத்து : இது போன்ற நிலையங்களை எல்லா மாவட்ட தலைநகரங்களிலும் வைக்க சர்க்கார் முயற்சி எடுக்குமா ?